Date : 03.12.2019

**O.S**.392/2018 **date** 03.12.2019 **PW1** சரண்யா முன்னிலையாகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

பிரதிவாதி தரப்பில் கு.வி.

தாவா சொத்தை கிரயம் ஒப்பந்தம் செய்து கொண்டதாக சொல்லப்படும் 13.3.2013 ல் நான் சின்னதிருப்பதி பாலாஜி நகரில் குடியிருந்து வந்தேனா என்றால் ஆமாம். கிரயம் பெற்ற தேதியிலிருந்து எவ்வளவு நாட்கள் கழித்து தாவா சொத்தை சையத் அப்துல் காதர் என்பவருக்கு வாடகைக்கு விட்டேன் என்றால் வாடகைக்கு விடவில்லை போக்கியதற்கு விட்டேன். நான் குடி போனதற்கு பிறகு 3 மாதங்கள் கழித்து போக்கியதற்கு விட்டேன். 3 மாத காலங்கள் தாவா சொத்தில் நான் குடியிருந்தேன் என்பதற்கு எந்தவிதமான ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். என்ன ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் தெரியவில்லை. தாவா சொத்தை கிரயம் பண்ணி கொடுத்து விட்டேன் என பிரதிவாதி என்னிடம் 16.12.2013 அன்றே கிரயம் செய்து விட்டதாக சொன்னார் என்றால் ஆமாம். பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். எந்த தேதியில் அனுப்பினேன் என்றால் தேதி தெரியவில்லை. மின்சார வாரியத்திற்கு பிரதிவாதி பெயரில் மின்சார இணைப்பை மாற்ற கூடாது என ஆட்சேபணை மனு கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. சொத்து வரி விதிப்பை பிரதிவாதி பெயரில் பதியக்கூடாது என ஆட்சேபணை மனுவை சேலம் மாநகராட்சிக்கு கொடுத்திருக்கிறேனா என்றால் கொடுத்திருக்கிறேன். எந்த தேதியில் அந்த மனு கொடுத்திருக்கிறேன் என்றால் தெரியவில்லை. அந்த மனுவின் நகலை தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். வழக்கு சொத்தின் பட்டாவை பிரதிவாதி பெயருக்கு மாற்ற கூடாது என்று ஆட்சேபணை மனு வட்டாட்சியருக்கோ அல்லது சேலம் மாநகராட்சிக்கோ கொடுத்தேனா என்றால் கொடுத்துள்ளேன். எந்த தேதியில் என்று தெரியுமா என்றால் தெரியாது. அந்த மனுவின் நகலை தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். பிரதிவாதியிடம் கடனை திருப்பி கொடுத்துவிட்டேன் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்றால்

ஆமாம். பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுத்த பத்திரத்தின் நகல் வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் மேற்படும் தாவா சொத்தின் கிரய பத்திரத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதானா என்றால் ஆமாம். சாட்சி கார்த்திகேயனின் கையெழுத்து என் வீட்டுக்காரருடையதுதானா என்றால் சரியாக தெரியவில்லை. அதில் உள்ள போட்டோ என்னுடையதுதான் என்றால் ஆமாம். மேற்படி பத்திரத்திலுள்ள விலாசம் என்னுடையதுதான் என்றால் ஆமாம். கிரயப்பத்திரம் என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் கிரய பத்திரம் பி.வா.சா.1. தாவா சொத்தை 16.12.2013 தேதியில் நான் கிரயம் செய்து கொடுத்ததாக கண்டுள்ளதா என்றால் நான் கிரயம் செய்து கொடுக்கவில்லை. பி.சா.ஆ.1 ல் ரூ.16 லட்சம் பெற்றுக் கொண்டு தாவா சொத்தை பழனிவேலுக்கு கிரயம் செய்து கொடுத்துவிட்டதாக எழுதப்பட்டுள்ளதாக என்றால் இல்லை. நான் கிரயம் வாங்கிய அசல் பத்திரம், அதற்கான மூல பத்திரங்கள் எல்லாம் பிரதிவாதி வசம் இருக்கிறதா என்றால் அவரிடம்தான் இருக்கிறது. எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்றால் தேதி தெரியவில்லை. பணம் வாங்கியதற்காகதான் அந்த ஒரிஜினல் ஆவணங்களை கொடுத்தேன். பிரதிவாதி பெயருக்கு கிரயம் செய்து கொடுத்துவிட்டு விவரம் தெரிந்தபிறகு பொய்யாக கிரயம் வாங்கிவிட்டீர்கள் என பிரதிவாதிக்கு நோட்டீஸ் கொடுத்தேனா என்றால் நோட்டீஸ் கொடுத்தேன். நோட்டீஸ் கொடுத்த தேதி தெரியுமா என்றால் தெரியாது. அதன் நகலை தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகம் இல்லை. முன்சீப் கோர்ட்டில் அசல் வழக்கு எண்.846/2015 ஐ தாக்கல் செய்வதற்கு முன்பு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் ஞாபகம் இல்லை. பிரதிவாதி வாடகை கட்டுப்பாட்டு மனுவை 4/2016 ஐ என் மீதும், சையத் அப்துல் காதர் மீதும், சிவக்குமார் மீதும் தாக்கல் செய்திருந்தாரா என்றால் என் மீதும் தாக்கல் செய்திருந்தார். சையத் அப்துல் காதருக்கும், பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட சமரசத்தின் பேரில் சையத் அப்துல் காதர் தாவா சொத்தினை காலி செய்துவிட்டு போய் விட்டார் என்றால் இல்லை நான்தான் குடி வைத்தேன். நான்தான் அவரை வெளியேற்றினேன். எந்த தேதி, மாதம், வருடம் அப்துல் காதரை வெளியேற்றினேன் என்றால்

ஞாபகமில்லை. ஜோசப் என்பவரைதான் தாவா சொத்திலிருந்து பழனிவேல் வெளியேற்றிவிட்டார் என்று பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம். எந்த தேதி, மாதம், வருடம் ஜோசப்பை வாடகைக்கு வைத்தேன் என்றால் 2017-2018 ம் ஆண்டில் குடி வைத்தேன். தேதி, மாதம் ஞாபகமில்லை. ஜோசப்பை தாவா சொத்தில் குடி வைத்தேன் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்றால் ஆமாம். பிரதிவாதியின் மீது போலீசில் புகார் கொடுத்தேன் என்றால் ஆமாம். அந்த புகாரின் மீது போலீசார் பிரதிவாதி மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் ஆமாம். என் மனுவின் மீது போலீசார் விசாரணை நடத்தினார்களா என்றால் என்னை விசாரித்தார்கள். அவரை விசாரிக்கவில்லை. அவரை தனியாக விசாரித்திருப்பார்களா இல்லையா என்றால் அந்த மாதிரி விசாரித்திருந்தால் நடவடிக்கை எடுத்திருப்பார்கள். போலீசார் விசாரணையில் சொத்தை நான் பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுத்துவிட்டது தெரிந்த பிறகு மனுவின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை கிரயம் செய்து கொடுத்து விட்ட பிறகு நான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருக்கவில்லை என்பதை தெரிந்து கொண்ட பிறகுதான் போலீசார் பிரதிவாதி மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அது தவறு. வா.சா.ஆ.5 நான் போட்ட வழக்குரைதான் என்றால் ஆமாம். வா.சா.ஆ.5 ல் நான் பாலாஜி நகர், மகேந்திரபள்ளி, சின்ன திருப்பதி என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. என்ன பரிகாரம் கேட்டு அசல் வழக்கு எண்.846/2015 தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் பிரதிவாதி கிரயம் செல்லத்தக்கதல்ல என்று கேட்டு தாக்கல் செய்திருக்கிறேன். நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு அந்த வழக்கை தாக்கல் செய்யவில்லையா என்றால் ஆமாம். பழனிவேலுவின் கிரயத்தை செல்லத்தக்கதல்ல என்று எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். பிரதிவாதி மீது CC.141/2018 என்ற வழக்கின் மீது தடையாணை பிறப்பிக்கப்பட்டு உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் ஆமாம். பிரதிவாதி என் மீதும், ஒரு காசோலை வழக்கும், என் கணவர் மீது ஒரு காசோலை வழக்கும்

தாக்கல்செய்து நீதித்துறை நடுவர் 1 நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்குகள் கிரயம் செய்து கொடுத்ததாக சொல்லப்படும் தேதிக்கு பின்னிட்ட வழக்குகள் என்றால் ஆமாம். அந்த வழக்குகளின் நகல்களை எதற்காக போட்டிருக்கிறேன் என்று தெரியாது என்று சொன்னால் ஆமாம். தெரியாது. 16.12.2013 லேயே தாவா சொத்தை பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுத்துவிட்டேன் என்றாலும், அதற்கு பிறகு எந்த காலத்திலும் தாவா சொத்தில் நான் சுவாதீனத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 4.5.2018 ல்தான் ஜோசப் என்பவரை தாவா சொத்திலிருந்து பிரதிவாதி வெளியேற்றிவிட்டார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் உரிமையாளர் பிரதிவாதி என்பதால் தாவா சொத்தை பொறுத்து இந்த வழக்கில் எந்த பரிகாரமும் கேட்பதற்கு எனக்கு உரிமையில்லை என்று சொன்னால் எனக்கு உரிமையிருக்கிறது. பிரதிவாதிக்கும் சையத் அப்துல் காதருக்கும் இடையே ஏற்பட்ட சமரசத்தின் அடிப்படையில் தாவா சொத்தில் பிரதிவாதிதான் குடியிருந்து வருகிறார் என்றால் தவறு. பிரதிவாதிக்கும் சையத் அப்துல் காதருக்கும் இடையே ஏற்பட்ட சமரசத்தின்படி அந்த காலத்திலேயே பிரதிவாதி குடியிருந்து வருவதால் 04.05.2018 ல்தான் பிரதிவாதி சுவாதீனத்திற்கு வந்தார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ,1 ஏற்பட்டபொழுது எத்தனை மணிக்கு நானும், என் கணவரும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றோம் என்றால் நேரம் ஞாபகமில்லை. எத்தனை மணிக்கு பி.சா.ஆ.1 ல் கையெழுத்து போட்டோம் என்றால் ஞாபகமில்லை. நான் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு போவதற்கு முன்பே பிரதிவாதி சென்று பி.சா.ஆ.1 ஆவணத்தை தயார் செய்து வைத்திருந்ததில் நான் கையெழுத்து போட்டேன் என்றால் ஆமாம். தாவா சொத்து கிரயத்தின் மூலம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டுள்ளதால், மேற்படி சொத்தை பொறுத்து பரிகாரம் கேட்டு நான் வழக்கை தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 முதல் 4 வரையிலான ரசீதுகளை சையத் அப்துல் காதரிடமிருந்து கேட்டு வாங்கி

தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்பதால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.